# விஷ்ணுவின் தீர்ப்பு

## சாந்திப்பிரியா

(அபிராமி , ஜனவரி, 2009 இதழில் வெளியான
இந்த கதையின் மறு பதிப்பு இது )



ஒரு முறை நாரதர் விஷ்ணுவைப் பார்க்க வைகுண்டத்திற்கு சென்று கொண்டு இருந்தார். வழி நிறைய காடுகள். அவற்றின் வழியாக சென்று கொண்டு இருந்த பொழுது வழியில் ஒரு இடத்தில் ஒரு முனிவர் தவத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டார். அவர் மீது கறையான் புற்று கூடு கட்டி இருப்பதுக் கூடத் தெரியாமல் தவத்தில் இருந்தார். அங்கு என்னதான் நடக்க இருக்கின்றது என்று பார்க்க எண்ணிய நாரதர் அங்கே சில நாட்கள் தங்கினார். சில நாட்கள் பொறுத்து அந்த முனிவர் கண் விழித்தெழுந்து கறையான் புற்றை விலக்கி விட்டு வெளியில் வந்தார். வந்தவர் நாரதரிடம் அவர் எங்கு போக இருக்கின்றார் எனக் கேட்க நாரதரும் தான் போக இருந்த இடத்தைப் பற்றிக் கூறினார். உடனே அந்த முனிவர் நாரதரிடம் மிகவும் மகிழ்ச்சி அடைந்து தனக்கு இன்னும் எத்தனை பிறவிகள் உள்ளன என விஷ்ணுவிடம் கேட்டறிந்து விட்டு வருமாறு வேண்டிக் கொண்டார். சரி என்று கிளம்பிப் போனார் நாரதர்.

இன்னும் ஒரு அடர்ந்த காட்டின் வழியாகச் செல்லுகையில் மற்றொரு முனிவர் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருந்ததைக் கண்டார். அவர் ஆடலிலும் பாடலிலும் பகவான் நாமம் மட்டும் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவர் ஆடலையும் பாடலையும் நிறுத்திவிட்டு நாரதரிடம் பேசிய பொழுது முதல் முனிவர் கேட்கச் சொன்ன கேள்வியையே விஷ்ணுவிடம் கேட்டு வந்து கூறுமாறு வேண்டினார்.

நாரதரும் விஷ்ணுவிடம் சென்று அந்த இரண்டு முனிவர்களும் கேட்ட கேள்வியைக் கேட்க விஷ்ணுவும் முதல் முனிவருக்கு மோட்சத்தை அடைய பல பிறவிகள் மீதம் உள்ளது எனவும் ஆனால் இரண்டாம் முனிவருக்கும் சில பிறவிகளதான் உள்ளது என்றாலும் ஒவ்ஒரு முறையும் அவர் மோட்சத்தையே அடைந்து மறு பிறவி எடுப்பார் எனவும் கூறி அனுப்பினார்.

நாரதர் அந்த இரண்டு முனிவர்களிடமும் சென்று விஷ்ணு கூறிய பதிலைக் கூற முதல் முனிவர் ஆத்திரப்பட்டார். ‘ என்ன எனக்கு இன்னும் பல பிறவிகளா , நான் இத்தனை நாட்களும் செய்த தவத்தின் பலன் அதுதானா’என ஆத்திரப்பட்டார். அடுத்த முனிவரோ அந்த பதிலைக் கேட்டு துள்ளிக் குதித்து ஆனந்தக் கூத்தாடினார். ‘ஆகா.. நான் எத்தனை பாக்கியம் செய்து உள்ளேன். இன்னும் பல பிறவிகளிலும் என்னால் பகவான் நாமத்தை உச்சரித்தபடி மகிழ்வோடு இருக்க முடியும் என்பதை நினைத்து ஆனந்தப்படுகின்றேன்’ என்றார்.

அவர்கள் பதிலைக் கேட்ட நாரதர் ஆச்சரியம் அடைந்தார். மீண்டும் விஷ்ணுவிடம் சென்று அவர்களுடைய பதிலைக் கூறி அவரிடம் அதற்கான விளக்கம் கேட்க விஷ்ணு கூறினார் ‘ தன்னை மறந்து பகவான் நாமத்தை உச்சரித்தபடியே இருந்த இரண்டாவது முனிவர்தான் உண்மையில் பாக்கியசாலி. அவர் எத்தனை பிறவி எடுத்தாலும் பகவானையே நினைக்கின்றார். அதனால்தான் அவர் பகவானுடனேயே வந்து தங்கட்டும் என்பதற்காக சில பிறவிகள் மட்டும் தந்தேன். தனக்கு மோட்சம் வேண்டும் என தன்னை மட்டுமே மனதில் வைத்துக் கொண்டு தவம் இருந்தவர் முதல் முனிவர். அவருக்கும் கடவுள் சிந்தனை இருந்தது என்றாலும் கடவுள் சிந்தனையை விட தன்னுடைய சிந்தனை மட்டுமே அதிகம் இருந்தது . அதனால்தான் மனம் இன்னும் பக்குவம் அடைய வேண்டும் என்பதினால் மேலும் பல பிறவீ எடுக்க வேண்டி உள்ளது’ என்றார்.